# அனைத்துலகத் தமிழ்க்கலைத் தேர்வு 2018
# தேர்வு விதிமுறை

**தேர்விற்கு தோற்றக்கூடிய பாடங்கள்:**
நடனம் (பரதம்), இசை (வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல்), மிருதங்கம்

**பாடத்திட்டம்:**
**மீளமைக்கப்பட்ட பாடத்திட்டம் - 2009**

**தேர்வுக் காலம்:**
**அறிமுறை: ஒக்டோபர் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை** முற்பகல்: நடனம், மிருதங்கம்
பிற்பகல்: இசை(வாய்ப்பாட்டு, வீணை, வயலின்)
**செய்முறை:** செப்டெம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் மாத இறுதிவரை பாடசாலை விடுமுறை நாட்களையும், வார இறுதி நாட்களையும் கருத்திற்கொண்டு நடைபெறும். (இரு வாரங்களுக்கு முன்னர் அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படும்.)

**விண்ணப்பம்:**
அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தில் அங்கத்துவச் சந்தா செலுத்தி தங்களை அங்கத்தவர்களாக இணைத்துக்கொண்டுள்ள நிறுவனங்கள் - ஆசிரியர்களது மாணவர்களும், ஜேர்மனி - தமிழாலயம், பிரான்ஸ் - தமிழ்ச்சோலை, நோர்வே - அன்னைபூபதி தமிழ்க்கலைக் கூடம், டென்மார்க் - மாலதி கலைக்கூடம், இத்தாலி - திலீபன் கல்வி நிலையம் போன்ற நிறுவனங்களில் கல்விகற்கும் மாணவர்கள் தங்கள் நிறுவனங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம். ஏனைய ஆசிரியர்கள் தங்களை அங்கத்தவர்களாக இணைத்துக்கொள்வதன் மூலம் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட தங்கள் நாடுகளிலுள்ள நிறுவனங்கள் மூலம் தேர்வுக்கட்டணத்துடன் €25.- மேலதிகமாகச்செலுத்தி விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம்.
சரியானமுறையில் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்களும் தனித்து அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப் படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தனித்தனியான விண்ணப்பப்படிவத்தினை முழுமைப்படுத்துதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 15.06.2018**

**விண்ணப்பிக்கக்கூடிய தரம்:**
தரம் ஒன்று முதல் ஆற்றுகைத் தரம்வரை நடைபெறும் இத்தேர்விற்கு புதிதாகத் தோற்றும் மாணவர்கள் தரம் ஒன்று தேர்விற்கே தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். வயதுகூடிய, அதிக பயிற்சியுள்ள, மாணவர்கள் புதிதாக தேர்விற்குத் தோற்றுவதாயின் அவர்கள் விரும்பும் பட்சத்தில் தரம் மூன்றிற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

தரம் ஆறு (Foundation 1), தரம் ஏழு (Foundation 2) ஆகிய தேர்வுகளிற்குத் தோற்ற இருக்கும் மாணவர்களிற்கான தேர்வுகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடாத்தப்படுவதுடன் தேர்வில் சித்தியடையும் மாணவர்களிற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக சான்றுதழ்களும் வழங்கப்படும். இம் மாணவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக பதிவுக் கட்டணமாக தரம் ஆறு, தரம் ஏழு மாணவர்கள் தேர்வுக்கட்டணத்துடன் 100 €; மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். இம் மாணவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் அனைத்துலகத் தமிழ்கலை நிறுவகமும் இணைந்து நடாத்தும் தேர்வுக்கான மாணவர் பதிவுப் படிவத்தினையும், விண்ணப்பப் படிவத்தினையும், முழுமைப்படுத்தி தரம் ஐந்து அல்லது தரம் ஆறு சித்தியடைந்தமைக்கான சான்றிதழ் பிரதியுடன் வதிவிட அனுமதிப்பத்திரத்தினையும் அடையாள அட்டைக்கான புகைப்படப்பிரதியினையும் இணைத்து (3.5x4.5 cm) தேர்விற்கு விண்ணப்பிக்கவேண்டும்.

தரம் இரண்டிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 31.12.2009 இற்கு முன்னர் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். தரம் 5, ஆற்றுகைத் தரத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் வயதினையும் கருத்திற்கொள்க. மாணவர்கள் முழுமையான கற்றலின்பின் அடுத்த தரத்திற்கு விண்ணப்பிப்பதே சிறப்பாகும். தேர்வில் தோற்றி தேர்ச்சியடைந்த மாணவர்கள் அடுத்த தரத்திற்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். தேர்வில்தோற்றி தேர்ச்சியடையாத மாணவர்கள் அத்தரத்திற்கே மீளத் தோற்றுதல் வேண்டும்.
இசைத் துறையில் - வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல் போன்ற பாடங்களில் ஒன்றினை பிரதான பாடமாக தேர்விற்குத் தெரிவுசெய்யும் மாணவர் உபபாடமாக மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களிற்கு தரம் இரண்டிற்குமேல் விண்ணப்பிப்பின் அம் மாணவர் அறிமுறைத் தேர்விற்குத் தோற்ற வேண்டியதில்லை. இவ்வாறு தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் பிரதான பாடத்தில் சித்தியடையும் பட்சத்திலேயே உபபாடத்திற்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**அறிமுறைத் தேர்விற்கான மீள்தேர்வு:**

கடந்தவருடம் தரம் ஆறு, தரம் ஏழு தரங்களிற்குத் தோற்றி **செய்முறைத் தேர்வில் சித்தியடைந்து** அறிமுறைத் தேர்வில் சித்தியடையாத மாணவர்கள் விரும்பின் இவ்வருடம் அறிமுறைத் தேர்விற்கு மட்டும் தோற்ற அனுமதிக்கப்படுவர். **எனினும் இம்மாணவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் சான்றிதழ்களினைப் பெற்றுக்கொள்வதாயின் ஒரே ஆண்டிலேயே அறிமுறை, செய்முறைத்தேர்வுகளில் சித்தியடைந்திருக்கவேண்டும்.** எனவே கடந்த வருடம் தரம் ஆறு, தரம் ஏழு தேர்வுகளிற்குத்தோற்றி அறிமுறை அல்லது செய்முறைத்தேர்வுகளில் சித்தியடையாத மாணவர்கள் மீள் தேர்விற்குத் தோற்றுவதாயின் இரு தேர்வுகளிற்கும் (அறிமுறை, செய்முறை) தோற்றுவதே சிறந்தது.

## தேர்வுக் கட்டணம், தேர்வு நேரம்:

| தரம் | வயது | தேர்வுக் கட்டணம் | தேர்வு நேரம் | |
|---|---|---|---|---|
| | | | அறிமுறை | செய்முறை |
| ஒன்று | | **€ 55.-** | --- | 20 நிமிடம் |
| இரண்டு | 31.12.2009 இற்குமுன் பிறந்தவர்கள் | **€ 70.-** | 120 நிமிடம் | 25 நிமிடம் |
| மூன்று | | **€ 85.-** | 180 நிமிடம் | 30 நிமிடம் |
| நான்கு | | **€ 100.-** | 180 நிமிடம் | 40 நிமிடம் |
| ஐந்து | 31.12.2005 இற்குமுன் பிறந்தவர்கள் | **€ 115.-** | 180 நிமிடம் | 50 நிமிடம் |
| ஆறு | | **€ 130.-** | 210 நிமிடம் | 60 நிமிடம் |
| ஆற்றுகைத் தரம் | 31.12.2001 இற்குமுன் பிறந்தவர்கள் | **€ 210.-** | 210 நிமிடம் | 90 நிமிடம் |

## ஒப்படைக்கான தலைப்பு: (தரம் 5)

தரம் ஐந்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தாங்கள் கற்கும் கலைத்துறையில் தங்களுக்குள்ள ஆர்வத்தின் எடுத்துக்காட்டாக ஒன்றுசேர்க்கும் படங்கள், தகவல்கள், வாசித்த, கேட்ட, பார்வையிட்ட இத்துறைசார்ந்த விடயங்கள் போன்றவற்றை ஒழுங்குமுறையில் தலைப்பிட்டு ஒட்டுவதுடன் இவைதொடர்பாக எழுதிவருதலும் வேண்டும்.

## பிந்திய விண்ணப்பம்:

15.06.2018 இற்கு முன்னர் விண்ணப்பப் படிவமும், தேர்வுக் கட்டணமும் நாடுகள்நிலைப் பிரதிநிதிகளுக்குக் கிடைக்கப்பெறாதவிடத்து அவ்விண்ணப்பங்கள் அனைத்தும் பிந்திய விண்ணப்பமாகவே கருதப்படும். இவ்வாறான விண்ணப்பம் ஒவ்வொன்றிற்கும் தேர்வுக் கட்டணத்துடன் **30 €** மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்.

## தேர்வு முறை:

தரம் ஒன்று தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வின்போது மாணவர்களிடம் வாய்மொழித் தேர்வும் நடைபெறும்.

ஏனைய தரங்களிற்கு அறிமுறை, செய்முறை எனத் தேர்வுகள் நடைபெறும். செய்முறைத் தேர்வின்போது வாய்மொழித் தேர்வும் நடைபெறும். மாணவர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் தரத்திற்கு கீழுள்ள தரங்களிலும் தேர்ச்சிக்கப்படுவார்கள்.

அறிமுறைத் தேர்விற்கு தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியிலேயே தோற்றுதல் வேண்டும். தாய்மொழி தெரியாதோரும், தமிழரல்லாதோரும் ஆங்கிலம், ஜேர்மன், பிறெஞ்ச் ஆகிய மொழிகளில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

இசைத்துறையில் தேர்விற்குத் தோற்றும் மாணவர்கள் செய்முறைத்தேர்வின்போது தாங்களே சுருதிப் பெட்டியினை இயக்குதல் வேண்டும். அல்லது இலத்திரனியல் சுருதிப்பெட்டியினை உபயோகித்தல் வேண்டும்.

ஆற்றுகைத் தரத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்திலும் முழுமையாகத் தேர்ச்சிக்கப்படுவதுடன் 60 முதல் 75 நிமிட ஆற்றுகை ஒன்றினையும் வழங்குதல் வேண்டும். இம் மாணவர்கள் செய்முறைத் தேர்வு, அறிமுறைத் தேர்வு போன்றவற்றில் தேர்ச்சியடையும் பட்சத்தில் இவர்களுக்கான ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு அடுத்த வருடம் இடம்பெறும். அத்துடன் இம் மாணவர்கள் துணைப்பாடத்தில் (நடனம் - வாய்ப்பாட்டு / மிருதங்கம், வாத்தியம் - வாய்ப்பாட்டு, வாய்ப்பாட்டு – வாத்தியம் / நடனம்) தரம் மூன்று தேர்ச்சியடையும் பட்சத்திலேயே அவர்களுக்கான "கலை வித்தகர்" எனும் சிறப்புப் பட்டம் வழங்கப்படும். ஆற்றுகை வெளிப்பாட்டுத்தேர்விற்குத் தோற்றும் மாணவர்கள் வீடியோ, புகைப்படக்கட்டணமாக 250 சுவிஸ் பிராங்குகளை ஆற்றுகை வெளிப்பாட்டுத்தேர்வின் போது வழங்குதல் வேண்டும்.

**அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்**
**சூரிச், ஏப்ரல் - 2018**